| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**<br>**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017** | |

| | | |
|---|---|---|
| **தரம் :- 10** | **இலக்கிய நயம்** | **நேரம் :- 3.00 மணி** |

## பகுதி I

❖ **பகுதி I இல் (i), (ii) வினாக்களுக்கும் பகுதி II இல் I ம் வினாவுக்கும் பகுதி III இல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

01. கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1) "தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும் சையோகம் புரிந்ததொரு வேளை நன்னில்"

   i) மேற்காட்டிய கவிதை அடிகளின் ஆசிரியர் யார்?

   ii) 'சையோகம்' என்பதன் பொருள் யாது?

2) 'மரம் என்பது உயர்திணை' என்ற பத்தி எழுத்தில்,

   i) சரித்திரச் சாலையில் வெளிப்படும் மரங்கள் எவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

   ii) மனிதன் படைத்த மரங்களாக சுட்டிக் காட்டப்பட்டவை எவை?

3) "காணின் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும் மான் இழை கண் ஒவ்வோம் என்ற"

   i) குறளின் கருத்தினை எழுதுக.

   ii) இங்கு இடம்பெற்ற அணி யாது? விளக்குக.

4) "..........பேர்க்க அரும் சீற்றம் பேர முகம் பெயர்த்து ஒதுங்கிற்றல்லால்
பார்க்கவும் அஞ்சினான் அப் பருவரை அனைய தோளான்"

   i) இங்கு 'பருவரை அனைய தோளான்' எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

   ii) "பேர்க்க அரும் சீற்றம் பேர" என்பதில் இருந்து விளங்குவது யாது?

5) "ஊது குழற்சத்தம் கேட்டவதிப்பட்டு
ஓடி வருகையிலே - இது
பாதி வழிவந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா..................

   i) இக் கவிதை அடிகள் கூற வரும் செய்தி யாது?

   ii) "தாமரைக் கை தந்த" என்ற அடியில் உள்ள இலக்கியச் சிறப்பை எழுதுக?

(5X4=20 புள்ளிகள்)



kalvi.lk

02. கீழ்வரும் கவிதையை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

காலையிலே பனி காயுமுன்னே குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம்! – தொழிற்
சாலையிலே சங்கு ஊது முன்னே பசுந்
தக்கத் தளிரினை கிள்ளிடுவோம்.

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும் - இரு
கொண்டை விழிகள் பளபளக்கும் தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்!

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் கிறுக்கிறுக் கோசையிலே – நெஞ்ச
வேதனை துன்ப ஒலி கேட்குக.

பக்க நிரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குமாக விலகிச் செல்வோம் எம்மைக்
சிக்க வைத்திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கு யெறியத் துணிவு கொள்வோம்.

i) மலைப் பாவையரின் ‘உழைப்பின் வலி’ இக் கவிதையில் எவ்விதம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ii) “நெஞ்ச மேடையிலே சதிராடு மெண்ணங்களின் துன்ப ஒலி கேட்கும்” என்ற வரிகள் மூலம் கவிஞர் கூறவரும் செய்தி யாது?

iii) “வெண்டை விரல்கள்” என்ற அடியின் இலக்கியச் சிறப்பு யாது?

iv) எதற்காக தாம் துணிவு கொள்வோம் என சபதம் எடுக்கின்றனர்.

v) வேதனைகளின் மத்தியிலும் “இரு கெண்டை விழிகள்” பளபளக்கக் காரணம் யாது?

(5X5=25 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ **கீழ்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

03. கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

இரண்டு மூன்று நாட்கள் சென்றன.

காளைக் கன்றுக் குட்டிக்கு கழுத்துச் சங்கிலியோடு வாய்ப்பூட்டான கூடையும் கிடைத்தது. நினைத்த நேரத்தில் பால் குடிக்க முடியவில்லை.

பால் கறக்கும் நேரத்தில் மட்டும் கன்றுக் குட்டியை அவிழ்த்து விடும் மாடசாமி? சரியாகப் பால் சுரந்து அதன் வாய்க்கு வரும் நேரத்தில் அதை இழுத்துப் பிடித்துக் கட்டிவிட்டுக் கறக்கத் தொடங்கி விடுவான் அவன் கறந்து முடித்து விட்டு அவிழ்த்து விடும் போதே மடியில் ஒரு சொட்டுப் பால் கூட மீதமிருக்காது.

கன்றுக்குட்டி முட்டிப்பார்க்கும்; மோதிப் பார்க்கும்; கதறிப் பார்க்கும், இந்தத் துடிப்பை காணும் அடுத்த வீட்டுக் காளையோ தன் அடித் தொண்டையிலிருந்து குரல் எழுப்பும் குறுக்கே நிற்கும் சுவரில் தன் கொம்புகளை அது மோதுவதும் உண்டு.

தாய்ப் பசுவுக்கோ இந்த வேதனைகளை தாங்கவே முடிவதில்லை. அதனால் என்ன செய்ய முடியும்? கன்றுக்குட்டியின் கன்னங்கரிய பெரு விழிகள் இரண்டும் ஒளி இழந்தது. அதனால் துள்ளவும் முடியவில்லை. குதிக்கவும் முடியவில்லை. தளதளவென்று சதைப்பிடிப்போடு இருக்க வேண்டிய மேனியில் எலும்புக்கூடு புறப்படத் தொடங்கியது.

i) மாடசாமியின் மனிதாபிமானமற்ற செயல் எவ்விதம் எடுத்துக் காட்டப்படுகிறது?

ii) காளை தன் கொம்புகளை சுவரில் மோதுவதற்கு காரணம் யாது?

iii) கன்றுக்குட்டியின் தோற்றத்தின் மாற்றம் எவ்விதம் எடுத்துக் காட்டப்படுகிறது?

iv) காளைக் கன்றுக் குட்டியின் அவலம் யாது?

v) தாய்ப் பசுவின் வேதனை கதையாசிரியரால் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?



kalvi.lk

## பகுதி II

01. 'நலம் புனைந்து உரைத்தல்' என்ற நிறக்குறள் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு.

1) தலைவியின் மென்மைத் தன்மை
2) தலைவியின் கண்ணழகை எடுத்துக்காட்டிய விதம்
3) தலைவியை நிலவோடு தொடர்புபடுத்திக் காட்டியுள்ளமையிலுள்ள சிறப்புக்கள்.

(15 புள்ளிகள்)

02. 'கிட்கிந்தைப் படலத்தை' அடிப்படையாகக் கொண்டு

1) அனுமன் ஆலோசனை கூறல்
2) வானர மகளிர் குழுவின் தோற்றம்
3) தாரையை நோக்கிய இலக்குமணனின் மனநிலை.

(15 புள்ளிகள்)

03. 'எலியம்' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,

1) "எலிகளுக்கும் அவனுக்கும் இடையே யுத்தப் பிரகடனம்" ஏற்படக் காரணம் யாது?
2) எலிகளை ஒழிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைக் குறிப்பிட்டு அதன் மூலம் அவள் அடைந்த துயரத்தை விளக்குக.

(15 புள்ளிகள்)

04. "உரிமையும் கடமையும்" என்ற கட்டுரையினூடாக ஆசிரியர் கூறமுற்பட்ட விடயங்களை பட்டியலிட்டு விளக்குக.

(15 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education
கல்வி
අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page